# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்(பொ),**
**ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு**
**அலுவலகம், அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.ந.ரா.தியாகராஜன், பி.டெக்.,**

ந.க.எண். 4990/2021 ஈமா3 நாள். 10.06.2022

பொருள் : திட்ட அனுமதி – குடியிருப்பு மனைப்பிரிவு – ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – ஈரோடு உள்ளூர் திட்டக் குழும பகுதி – ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் – புஞ்சைலக்காபுரம் ஊராட்சி மற்றும் கிராமம் – ரீ.ச.எண். 198/2B – 1.07 ஏக்கர் (அல்லது) 4330.00 ச.மீ நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்குதல்– தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர் திரு.K.லட்சுமணகுமார் மற்றும் மூவர் என்பவரது விண்ணப்பம் நாள்.–– இணையதளம் விண்ணப்பம் எண்.20210200101 6809, நாள்.13.11.2021. (பெறப்பட்ட நாள்.18.11.2021)
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுலகம், ஈரோடு மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண். 4990/2021/ஈமா 3 நாள்.19.01.2022
3. மனுதாரர் திரு.K.லட்சுமணகுமார் மற்றும் மூவர் என்பவரது கடிதம் நாள்.07.03.2022 (சாலை பகுதிகள், மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண். 1671/2022 நாள்28.02.2022 மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO–பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்.1671/2022 நாள். 28.2.2022)
4. அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(I)துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(I) துறை, நாள்.31.01.2020.
5. அரசாணை (நிலை) எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020–போ நாள்.24.12.2020.
7. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
8. அரசாணை எண்.141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி

நவ4(3)த்துறை, நாள்.23.09.2020

9. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.30.08.2017

10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017

11. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.16.3.2022.

12. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விபரம் நாள். 16.5.2022.

----------

**உத்திரவு :**

01. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் காணும் மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஆகியன உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண். 1671/2022 நாள்28.02.2022 மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்.1671/2022 நாள்.28.2.2022 -இல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

02. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஈமா(ஈஉ_திகு) எண். 23/2022 என எண்ணிடப்பட்டும் 3 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

03. ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு, திட்ட அனுமதி எண். 22/2022 என்ற எண்ணில் திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது

04. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.18(ஈ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

05. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத்துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

06. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி

99



வைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிற

**சிறப்பு நிபந்தனைகள்**

1. (a) பார்வை 5–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4–ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண் 47 (11)–ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc, as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.31.01.2020–இன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 9 மற்றும் 10–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"–இன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப் படுகிறது.

5. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம்

மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

உறுப்பினர் செயலர்/ துணை இயக்குநர்(பொ),
ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு.

<u>பெறுநர் (இணைப்புடன்)</u>

| | | |
|---|---|---|
| 1. தலைவர்,<br>புஞ்சைலக்காபுரம் ஊராட்சி<br>மொடக்குறிச்சி வட்டம்,<br>ஈரோடு மாவட்டம். | : | அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ./ஈமா(ஈஉதிகு) எண். 23/2022 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –3 தொகுப்பு தானப்பத்திரம் ஆவணம் எண்.1671/2022 அசல் |

<u>நகல்: மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)</u>
திரு.K.லட்சுமணகுமார் மற்றும் மூவர்,
44/8, மெட்ரோ காம்ப்ளக்ஸ்,
மோளக்கவுண்டன்பாளையம்,
கரூர் பைபாஸ் ரோடு,
ஈரோடு –638 002.

<u>நகல்: வரைபடத்துடன்</u>

1) வட்டாட்சியர்,
ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு வட்டம், ஈரோடு மாவட்டம்.

2) உதவி இயக்குநர் (நில அளவை),
ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

<u>(தகவலுக்காக)</u>

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.1A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road, Egmore, Chennai – 600 008.

அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். ஒரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்

2. ஒரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொதுகாரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடை, பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

5. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில், திட்டவிதிகளின்படி தனித்தொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்படவேண்டும். ஒரு பக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்டு அளவினையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக் கூடாது

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு விடப்பட வேண்டும்.மனைப்பிரிவில் அமையும் 9 மீட்டர் சாலைக்கு 1.5மீ மற்றும் 10.0மீ சாலைக்கு 3.0மீ என்ற அளவில் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகளின்படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்பிற்கும் உட்பட்ட நிலப்பகுதியினை தெருவின் உயர்மட்டத்திலிருந்து 1.8 மீ (6அடி) உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த வித கட்டிடமோ சுவரோ கட்டுதல் கூடாது.

7. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்தவெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 2மீ திறந்தவெளி இருத்தல் வேண்டும்.

9. விரிவு அபிவிருத்தித் திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில், திட்ட விதிகளின்படி மனையின் பரப்பில் 50 விழுக்காட்டிற்கு மேல் கட்டடம் ... திறந்தவெளியினை

தமிழ்நாடு அரசு

நகர் ஊரமைப்புத் துறை, ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம், ஈரோடு.

ந.க.எண்.: 4990/2021 ஈமா3 நாள் : 10.06.2022

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. 1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு ம.வ/ஈமா(ஈஉ திகு) எண். 23/2022 என எணிணிடப்பட்டு வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகள் 2019–ன்படி ஏற்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரரால் நிர்வாக அதிகாரியால் (Executive Authority) நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனைப்பிரிவு சாலைகள் அமைக்கப்பட்டதனை தொடர்ந்து தேவையான பாலங்கள்/ சாக்கடை வடிகால் துப்பரவு வசதி/ சூரியஒளி தெருவிளக்கு (Solar Powet Street Light) ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்திற்கொப்ப மனுதாரர் அமைத்துத் தர வேண்டும்

2. ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல், மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் இக்குழும உறுப்பினர் செயலரின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது

3. அங்கீகரிக்கப்பட்டு இம்மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்டுள்ள சாலைகள் (ம) பொது ஒதுக்கீடு மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / உரிமையாளர் முறையாக அமைத்து அல்லது அதற்குரிய கட்டணத்தை செலுத்தி தலைவர், புஞ்சைலக்காபுரம் ஊராட்சி அவர்களுக்கு உரிய படிவத்தில் பதிவு செய்து சாலையாக பராமரிக்க தலைவர், புஞ்சைலக்காபுரம் ஊராட்சி அவர்களுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (தானப்பத்திரம் எண்:1671/2022 நாள்: 28.02.2022), TANGEDCO பகுதி – உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (தானப்பத்திரம் எண். 1671/2022 நாள் : 28.02.2022)

4. மேற்படி சாலைகளை பொதுச் சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவு தொகையையும் உள்ளாட்சிக்கு செலுத்துதல் வேண்டும். இதை நடைமுறைபடுத்த மனுதாரரிடமிருந்து சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கான உட்பிரிவு கட்டணத் தொகையை பெறும் வகையில் பத்திரத்தில் மனுதாரரின் கையொப்பம் பெற வேண்டும்

5 உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து

தோட்டமாகவோ, திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ துப்புரவாக பராமரித்தல் வேண்டும்

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11. கடைக்கல் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.

12. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

14. மனைப்பிரியில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

15. பூங்கா போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட மனைகளை வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம், அங்கீகாரம் வாங்கும் முன் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்க வேண்டும். இதனை உள்ளாட்சி அமைப்பு தவறாது கடைப்பிடிக்க வேண்டும். இத்தகைய நிலங்களை மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

16. மனையின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின்கம்பிப் பாதை, தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்டு மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

17. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைக்குட்படுவதாக எழுத்து மூலமாக உள்ளாட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகள் தொடர்புடைய சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனைப் பத்திரங்களின் பகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும்.

18. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால்,

மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

இ. மனைப்பிரிவு இடம் 1894-ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4(1) படி பிரகடனம் செய்யப்பட்டுள்ளதா? என்பது பற்றி பரிசீலனை செய்த பின்வரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1951 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்வதற்காக உள்ளாட்சியால் மனநிறைவு அடைந்த பின்னரே தான் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் ஒப்புதலளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஈ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

உ. மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப் பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதையும் மனநிறைவு அடைந்த பின்னரே தான் உள்ளாட்சியால் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

19. மனுதாரர், உள்ளாட்சியிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண், நாள் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாள், எண் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்படவேண்டும்.

20. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரியம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டு காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

21. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு: ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.

22. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல்

அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

23. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு
## ம.வ./ஈமா(ஈஉ திகு) எண்.23/2022
## (திட்ட அனுமதி எண். 22/2022 )–இன் ஒதுக்கீடு விபரம்

ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் – புஞ்சைலக்காபுரம் ஊராட்சி மற்றும் கிராமம் – ரீ.ச.எண். 198/2B – 1.07 ஏக்கர் (அல்லது) 4330.00 ச.மீ

| | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 1.07 ஏக்கர் (அ) 4330.00 சமீ | |
| ஒதுக்கிய மனைகள் | : | 25 மனைகள் | |
| பொது ஒதுக்கீடு: மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை | | | |
| மனைப்பிரிவு சாலைகள் பரப்பு | : | 1067.00 ச.மீ | |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு | : | 23.70 ச.மீ | 0.73 % |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை | | | |
| மின்பகிர்மானப் பரப்பு (TANGEDCO) | : | 25.83 ச.மீ | 0.79 % |
| 10% பூங்கா 330.0 ச.மீ பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.4,21,000/– உரிய அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் 16.05.2022 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. | | | |

(கையொப்பம்) 10/06/22

உறுப்பினர் செயலர்/ துணை இயக்குநர்(பொ),
ஈரோடு உள்ளூர் திட்டக்குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு.

10/6/22 10/6/22

# மொடக்குறிச்சி வட்டாரம், லக்காபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.L.P.சாலைமாணிக்கம், தலைவர்

ந.க.எண். 05/2022 நாள் 22.08.2022

**பொருள் :** மனைப்பிரிவு - ஈரோடு மாவட்டம் - மொடக்குறிச்சி வட்டாரம் - புஞ்சை லக்காபுரம் ஊராட்சி மற்றும் கிராமம் ரீ.ச.எண்.198/2B-ல் -ல் 4330 ச.மீ. (1.07 ஏக்கர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களால் திட்ட அனுமதி அளிக்கப்பட்டது - இறுதி உத்தரவு வழங்கி ஆணையிடல் - சார்பாக.

**பார்வை:**

1.அரசாணை எண். 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017.

2.உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் ந.க.எண். 4990/2021 ஈமா-3 நாள்.10.06.2022

3.மனுதாரர் திரு.K.லட்சுமணகுமார் மற்றும் மூவர் என்பவரது கடிதம் (சாலை பகுதிகள் மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவணங்கள்

4.திரு.K.லட்சுமணகுமார் மற்றும் மூவர் என்பவர்களது விண்ணப்பம் நாள்: 14.06.2022

5.மனுதாரர் செலுத்திய கட்டணங்களின் சலான் நகல்கள்

6.லக்காபுரம் ஊராட்சிக்கு செலுத்திய இரசீது நாள்: 20.08.2022

@@@@@@@@@

**உத்தரவு:-**

பார்வை 1-ல் காணும் அரசாணை மற்றும் 2-ல் காணும் கடிதத்தின்படி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், புஞ்சை லக்காபுரம் ஊராட்சியில் ரீ.ச.எண். 198/2B -ல் 4330.0ச.மீ. (1.07 ஏக்கர்) நிலப்பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ. / ஈமா(உ.தி.கு.) எண். 23/2022 என எண்ணிடப்பட்டு உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களால் பின்வருமாறு திட்ட அனுமதி (எண்.22/2022) வழங்கப்பட்டுள்ளது.

திட்ட அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவின் அமைவிடம் | ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், புஞ்சை லக்காபுரம் ஊராட்சி. |
| 2 | ரீ.சர்வே எண். | 198/2B |
| 3 | தொழில்நுட்ப அனுமதி வரைபடம் எண் | ம.வ./ஈமா(உ.தி.கு) எண். 23/2022 |
| 4 | கோப்பு எண் | 4990/2021 ஈமா3 நாள்.10.06.2022 |
| 5 | மனைப்பிரிவின் பரப்பளவு | 4330ச.மீ. (1.07 ஏக்கர்) |
| 6 | கோரிய மனையிடங்கள் | 25 |
| 7 | ஒதுக்கீடு செய்யப்பட்டவை | 25 |
| 8 | மனைப்பிரிவு சாலையின் பரப்பு மற்றும் மூலை முடுக்கு<br>(மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது) | 1067.008 ச.மீ.<br>தான சாசன ஆவண எண்.1882/2022 |
| 9. | பூங்கா / திறந்த வெளி இடம் | 27.30 ச.மீ.<br>10% பூங்கா 330.0 ச.மீ. பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.4,21,000/- உரிய அரசுத் தலைப்பில் மனுதாரரால் 16.05.2022 அன்று செலுத்தப்பட்டுள்ளது. |
| 10. | மின் பொது உபயோக இடம் | 25.83 ச.மீ. |
| 11. | கடை (மனுதாரர் விற்பனைக்குரியது) | - |
| 12. | நிபந்தனைகள் வரிசை எண்.17-ஐ பூர்த்தி செய்த விபரம் | - |

உள்ளூர் திட்டக் குழுமத்தில் தெரிவிக்கப்பட்டவாறு நன்னிலை வரி தொகை ரூ.8000/-ஐ பாரத மாநில வங்கி சலான் எண்:20220514001264 நாள்: 16.05.2022 மற்றும் அபிவிருத்திக் கட்டணம் தொகை

6. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் வழியாக மட்டும் ஒரே சீராக மின்கம்பங்கள் அமைத்து மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். Zig-Zag ஆக மின்கம்பங்கள் அமைக்கக் கூடாது.

7. குறைந்த வருவாய்க்கான மனைகளை மனை உட்பிரிவு மனை ஒருங்கிணைப்பு செய்யக் கூடாது.

8. இந்த வரன்முறைக்காக மனுதாரர் செலுத்திய கட்டணங்களில் ஏதேனும் குறைவு என பின்னர் ஆய்வு / தணிக்கையில் தெரிய வந்தால் நிலுவைத் தொகையினை மனுதாரர் முழுமையாக செலுத்த வேண்டும்.

9. வரன்முறை செய்யப்படும் மனையிடத்தினை அதற்கென ஒதுக்கப்பட்ட குடியிருப்பு/ வணிக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் பயன்படுத்திட அனுமதி இல்லை.

10. அரசின் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்ய ஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்,
லக்காபுரம் ஊராட்சி.
தலைவர்
லக்காபுரம் ஊராட்சி

<u>பெறுதல்:</u>

திரு.K.லட்சுமணகுமார் மற்றும் மூவர்,
44/8, மெட்ரோ காம்ப்ளக்ஸ்,
மோளக்கவுண்டன்பாளையம், கரூர் பைபாஸ் ரோடு,
ஈரோடு-638 002.

நகல் : 1.உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு, ஈரோடு.
2.ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), ஈரோடு அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3.சார்பதிவாளர் அலுவலகம், அவல்பூந்துறை.
4.வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மொடக்குறிச்சி வட்டாரம்.
5. அலுவலக கோப்பிற்கு.

ரூ.23000/- ஐ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நாள்: 16.05.2022-ன் படி செலுத்தி, 10% பூங்கா 470.0 ச.மீ. பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.4,21,000/-ஐ பாரத மாநில வங்கி சலான் எண்:20220514001227 நாள்: 18.05.2022 மற்றும் கூராய்வுக் கட்டணம் ரூ.6600/- ஐ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நாள்:16.11.2021-ல் செலுத்தி, ஆகியவற்றின் செலுத்துச் சீட்டின் நகலினை ஒப்படைத்துள்ளார். மேலும் உள்ளாட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வுக் கட்டணம் ரூ. 25,000/- மற்றும் வழிகாட்டி மதிப்பீட்டில் 3% தொகை ரூ.1,53,000/- ம் ஆகமொத்தம் ரூ.178000/-(ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தெட்டாயிரம் மட்டும்) காசோலை எண்.000005/12.08.2022-ன் (பலவகை இரசீது எண்.1624/20.08.2022) படி லக்காபுரம் ஊராட்சிக்கு செலுத்தியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம், புஞ்சை லக்காபுரம் ஊராட்சியில் ரீ.ச.எண்.198/2B-ல் 4330.00 ச.மீ. (1.07 ஏக்கர்) பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ. / ஈமா (உ.தி.கு.) எண். 23/2022 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு உரிய கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதால் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி வரைபடம் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. பார்வை 2-ல் காணும் உறுப்பினர் செயலர்/துணை இயக்குனர்(பொ), ஈரோடு உள்ளூர் திட்டக் குழுமம், ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 23 முடிய நிபந்தனைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். இந்நிபந்தனைகள் மீறப்பட்டதாக தெரியவந்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இந்த உத்தரவு இரத்து செய்யப்படும்.

2. இந்த மனைப்பிரிவு ஒப்புதலுக்காக மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள், சான்றுகள் ஆகியவை தவறு என்றோ, போலியானது என்றோ அறியப்பட்டாலோ அல்லது இம்மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இந்த ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

3. விற்பனைக்குரிய மனையிடங்களை விற்பனை செய்யும் பொழுது இவ்வாணையின் நகலோடு உள்ளூர் திட்டக் குழுமத்தால் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விபரங்களை உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலரின் அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.

5. பத்திரப்பதிவு மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப்பொறுப்பாவார்.



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate